# தமிழ்



தரம் 1

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தமிழ்

## பாடநூல்

## தரம்

# 1

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதலாம் பதிப்பு - 2015

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
சிசாரா பிரின்வே பிரைவட் லிமிட்டட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

மகிழ்ச்சிகரமான மாணவர் பருவம் கல்வியின் மூலமே அர்த்தப்படுத்தப்படுகின்றது. மாணவர் மனங் கவரும் விதத்தில் பொருத்தமாக வடிவமைக்கப்பட்டுள்ள இப்பாடநூலானது உங்களுக்கு இலவசமாக வழங்கப்படுவது, வெற்றிகரமான கற்றல் மூலம் சிறந்த ஓர் எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கிலாகும்.

நீங்கள் இந்நூலைச் சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டுக்காக உழைக்கக் கூடிய அறிவும் பண்பும் மிக்கதொரு மாணவ சமூகத்தைக் காண்பதே எமது நோக்கமாகும்.

**அகில விராஜ் காரியவசம்**
கல்வி அமைச்சர்

# முன்னுரை

கல்வியின் பணி, அறிவு மற்றும் பண்புகள் நிறைந்த பரம்பரையின் மூலம் நல்ல குடிமக்களை உருவாக்குவதாகும். ஆரம்பக் கல்வியின் பிரதான நோக்கம் இதற்கான அடித்தளத்தை இடுவதாகும். இப்பாட நூல் உங்கள் அறிவு மற்றும் திறன்களின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஆக்கப்பட்டிருக்கின்றது.

2016 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் ஒரு புதிய பாடத் திட்டம் மற்றும் அதற்குப் பொருத்தமான புதிய பாட நூல்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதை நான்றாக வாசித்து, செயற்பாடுகளில் ஈடுபட்டு, அறிவு பெற்று நீ ங்கள் நாட்டிற்குப் பயனுள்ள நல்ல குடிமகன் ஆவதை காண்பது எங்களின் நோக்கமாகும்.

இப்பாட நூலை ஆக்குவதில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர் குழுவிற்கும், பதிப்பாசிரியர் குழுவிற்கும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**திஸ்ஸ ஹேவாவிதான**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல
2015.07.27

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**திரு. திஸ்ஸ ஹேவாவிதான**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**திருமதி. டபிள்யூ.டி. பத்மினி நாலிகா**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (உற்பத்தி மற்றும் விநியோகம்),
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**திரு. லெனின் மதிவானம்**
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

**திருமதி. வீ. வசந்தி**
ஆசிரியர்,
புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன்.

**ஜனாபா. கே.எம். நூர்ஜஹான்**
ஆசிரியர்,
ஹமீட் அல் ஹுஸைனியா தேசிய பாடசாலை, கொழும்பு - 12.

## பதிப்பாசிரியர் குழு

**திரு. லெனின் மதிவானம்**
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்.
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**திரு. வீ.என்.எஸ். உதயசந்திரன்**
விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

**திருமதி. ரீ. மாணிக்கராஜா**
ஆசிரியர்,
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு - 13

## அட்டைப்படம், தளக்கோலம், கணினி தட்டெழுத்து

**செல்வி எச்.எஃப். ரிஸ்னா**
கணினி வடிவமைப்பாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## ஓவியங்கள்

**திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | செல்லக் குட்டி | 1 |
| 2. | என் பந்து | 2 |
| 3. | சுவைகள் | 3 |
| 4. | பாடல் பாடுவோம் | 4 |
| 5. | கதை கேட்போம் | 5 |
| 6. | நிறங்கள் | 7 |
| 7. | கட்டளைகள் | 11 |
| 8. | அறிவித்தல்கள் | 12 |
| 9. | அறிவுறுத்தல்கள் | 12 |
| 10. | பெயர்ப் பலகைகளை வாசிப்போம் | 13 |
| 11. | சொற்றொடர்களை வாசிப்போம் | 14 |
| 12. | பிராணிகளின் ஒலிகள் | 16 |
| 13. | பிராணிகளின் ஒலிகள் | 17 |
| 14. | வேறு ஒலிகள் | 20 |
| 15. | பழமொழிகள் | 23 |
| 16. | எழுத்துக்கள் | 24 |
| 17. | வாசிப்போம் | 25 |
| 18. | சுயவிபரம் | 27 |
| 19. | ஆத்திசூடி | 29 |
| 20. | புதிர்கள் | 30 |
| 21. | விடுகதைகள் | 32 |
| 22. | தகவல்கள் | 33 |
| 23. | சிங்கம் | 35 |
| 24. | ஆபத்தில் உதவுதல் | 38 |
| 25. | காகமும் குருவியும் | 39 |
| 26. | பெரியவர் | 40 |
| 27. | பட்டம் | 41 |

# தமிழ் மொழி வாழ்த்து

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே!*
*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*
*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*
*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி*
*வாழ்க தமிழ்மொழியே!*
*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*

*- சுப்பிரமணிய பாரதியார் -*

## பாடநூல் கருப்பொருட் பாடல்

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்
வாசமே
கண்களில் காட்சி தோன்றும் எமது
உலகமே வெளிச்சமே...//


புத்தகம் அறிவு வரும் முகங்களில்
மகிழ்வு தரும்
புதிய புத்தகம் புதிய பொலிவு பெறும்
தினமுமே.

புத்தகம் கண்கள் தானே அதை
காப்பது போலவே
அறிவைத் தரும் புத்தகங்களை
மகிழ்வுடன் காப்போமே.

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்...//


பாடலாசிரியர் :- சரத் குமார பெரேரா
இசை :- மகேஷ் தெனிப்பிட்டிய

# செல்லக் குட்டி



சின்னச் சின்ன நாய்க் குட்டி
செல்லமான நாய்க் குட்டி
பள்ளிக்கூடம் விட்டு வந்தால்
பாய்ந்து வரும் நாய்க் குட்டி
கொஞ்சம் நானும் பக்கம் வந்தால்
கொஞ்சி வரும் நாய்க் குட்டி
எட்டாததூரம் செல்லும் பந்தை
எடுத்து வரும் நாய்க் குட்டி.

# என் பந்து



சின்னச் சின்னப் பந்து
சிறுமி ஆடும் பந்து
வண்ண வண்ணப் பந்து
வானில் பாயும் பந்து
குட்டிக்கையால் தட்டினால்
குதித்து ஓடும் பந்து
எட்டி ஓங்கி உதைத்தால்
எங்கோ போகும் பந்து.

# சுவைகள்

சீனி தின்றால் இனிக்கும்
தேனும் நன்றாய் இனிக்கும்
மாங்காய் வாயில் புளிக்கும்
புளியங் காயும் புளிக்கும்

மிளகாய் கடித்தால் உறைக்கும்
மிளகும் வாயில் உறைக்கும்
வேப்பங் காயும் கசக்கும்
பாகற் காயும் கைக்கும்

உப்பு சுவைக்க உவர்க்கும்
உணவில் சேர்க்கச் சுவைக்கும்
பாக்கு நாவில் கயரும்
பல்சுவை இவையென அறிவீர்.

**கவிஞர் த. துரைசிங்கம்**

## பாடல் பாடுவோம்

காக்கா அந்தப் பக்கம் கா... கா... கா...

கிளி இந்தப் பக்கம் கீ.. கீ.. கீ..

குயில் மரத்தில் கூ.... கூ..... கூ....

கோழி கூரையில் கொக்... கொக்... கொக்...

பசுவும், கன்றும் மா... மா... மா...

வெள்ளைப் பூனை மியாவ்.. மியாவ்.. மியாவ்..

மேயும் ஆடு மே.... மே.... மே.....

காக்கும் நாய் வள்.... வள்..... வள்....

டம்..... டம்... டும்.... டும்..... கச்சேரி

நடக்குது பாரு ஊருக்குள்ளே.....

# கதை கேட்போம்

## குரங்குகளும் முதலையும்

ஒரு குளக்கரை. அங்கு பல மரங்கள் நின்றன. மரங்களில் சில குரங்குகள் வாழ்ந்து வந்தன. அவை மரத்துக்கு மரம் தாவிக் குதித்து விளையாடி மகிழ்ந்தன. மகிழ்ந்த குரங்குகள் ஒரு வேடனைக் கண்டவுடன் பயந்து ஓடின. ஓடியவை குளத்தில் பாய்ந்து, நீரில் நீந்த இயலாது தவித்தது.



தவித்த குரங்குகளை ஒரு முதலை கண்டு இரக்கம் கொண்டது. அவற்றைத் தன் முதுகில் சுமந்து சென்று கரையில் விட்டது. குரங்குகள் முதலைக்கு நன்றி கூறின.


**ஆபத்தில் உதவுவதே உண்மையான கருணை.**

# நிறங்கள்

காகம் கறுப்பு நிறம்




வானம் நீல நிறம்




கிளி பச்சை நிறம்



மாம்பழம் மஞ்சள் நிறம்



## கத்தரிக்காய் ஊதா நிறம்




## தக்காளிப்பழம் சிவப்பு நிறம்



# பால் வெள்ளை நிறம்



# வெண்டிக்காய் பச்சை நிறம்



# கட்டளைகள்

இங்கே வாருங்கள்.

கதவை மூடுங்கள்.

ஜன்னலைத் திறவுங்கள்.

புத்தகத்தை எடுங்கள்.

புத்தகப் பையைத் திறவுங்கள்.

## அறிவித்தல்கள்

1 நாளை பாடசாலை ஆரம்பமாகும்.

2. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் சித்திரக் கண்காட்சி நாளை நடைபெறும்.

3. பெற்றோர்களுடனான கலந்துரையாடல் சனிக்கிழமை நடைபெறும்.

## அறிவுறுத்தல்கள்

1. குப்பைகளை குப்பைக் கூடையில் போடுங்கள்.

2. கண்ட இடங்களில் குப்பை போட வேண்டாம்.

3. நுளம்பு பெருகுவதைத் தடுப்போம்.

# பெயர்ப் பலகைகளை வாசிப்போம்

1. அதிபர் அலுவலகம்
2. நூலகம்
3. ஆரம்பப் பிரிவு
4. விஞ்ஞானக் கூடம்
5. சிற்றுண்டிச் சாலை
6. கணினிக் கூடம்
7. புகையிரத நிலையம்
8. தபாலகம்
9. வைத்தியசாலை
10. பாடசாலை
11. பேருந்துத் தரிப்பிடம்
12. விமான நிலையம்
13. வங்கி
14. மருந்தகம்
15. காவல் நிலையம்
16. பிரதான வீதி

# சொற்றொடர்களை வாசிப்போம்

1. கறுப்புப் பூனை
2. வெள்ளை முயல்
3. கரிய காகம்
4. அழகான பறவை
5. சுவையான உணவு
6. மாடி வீடு
7. பெரிய மரம்
8. சிறிய செடி
9. வெள்ளைப் பசு
10. பச்சைக் கிளி
11. ஓடி விளையாடு
12. ஆடிப் பாடு

13. கிளி அழகான பறவை

14. பசு சாதுவான மிருகம்

15. பசு பால் தரும்

16. யானை பெரிய மிருகம்

17. மயில் அழகாக ஆடும்.

18. சிங்கம் காட்டில் வாழும்

19. சூரியன் காலையில் உதிக்கும்

20. கரும்பு இனிக்கும்

# பிராணிகளின் ஒலிகள்

| | |
|---|---|
| நாய் | குரைக்கும் |
| காகம் | கரையும் |
| கிளி | பேசும் |
| கோழி | கூவும் |
| குருவி | கீச்சிடும் |
| பூனை | சீறும் |
| குயில் | கூவும் |

# பிராணிகளின் ஒலிகள்

கிளி - கீ.... கீ.... கீ




குருவி - கீச்... கீச்... கீச்....




நாய் - வள்... வள்... வள்...



காகம் - கா... கா... கா...



கோழி - கொக்... கொக்... கொக்...




பூனை - மியாவ்...மியாவ்.. மியாவ்



# வேறு ஒலிகள்

**புகைவண்டி** - தட... தட...



பட்டாசு - பட்... பட்...



இடி முழக்கம் - டமார்... டமார்...



மேளம் - டும்... டும்...



மணி - கிணிங்... கிணிங்...



# பழமொழிகள்

1. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

2. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

3. இளங்கன்று பயம் அறியாது.

4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

5. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

6. ஆழம் அறியாமல் காலை விடாதே.

# எழுத்துக்கள்

| | |
|---|---|
| 1. பறக்கும் எழுத்து | ஈ |
| 2. சுடும் எழுத்து | தீ |
| 3. அழைக்கும் எழுத்து | வா |
| 4. துரத்தும் எழுத்து | போ |
| 5. உதவும் எழுத்து | கை |
| 6. கேட்கும் எழுத்து | தா |

## வாசிப்போம்

| குறில் | நெடில் |
|---|---|
| 1. தடி | தாடி |
| 2. நடி | நாடி |
| 3. படி | பாடி |
| 4. மடு | மாடு |
| 5. வடி | வாடி |
| 6. மடி | மாடி |
| 7. மதம் | மாதம் |
| 8. பதம் | பாதம் |
| 9. வனம் | வானம் |
| 10. நிலம் | நீலம் |

11. குடம் கூடம்

12. படம் பாடம்

13. கலை காலை

14. மலை மாலை

# சுயவிபரம்

## நான் யார்?

1. எனது பெயர் ....................................

2. எனது வயது ....................................

3. என் அப்பாவின் பெயர் ..........................

4. என் அம்மாவின் பெயர் ..........................

5. நான் ........................ என்னும் இடத்தில் வசிக்கிறேன்.

6. எனது பாடசாலையின் பெயர்

..................................................

7. நான் ........................................ வகுப்பில் படிக்கிறேன்.

8. நான் விரும்பும் உணவு ..............................

9. எனது செல்லப் பிராணி ............................

10. நான் விரும்பும் விளையாட்டு ..................

# ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு

2. ஆறுவது சினம்

3. இயல்வது கரவேல்

4. ஈவது விலக்கேல்

5. உடையது விளம்பேல்

6. ஊக்கமது கைவிடேல்

7. எண், எழுத்து இகழேல்

8. ஏற்பது இகழ்ச்சி

9. ஐயம் இட்டு உண்

10. ஒப்புரவு ஒழுகு

11. ஓதுவது ஒழியேல்

12. ஔவியம் பேசேல்

# புதிர்கள்

பழங்களை விரும்பி உண்பேன்.

முதுகில் மூன்று கோடுகள் இருக்கின்றன.

நான் யார்?

அணில்




தண்ணீரில் நீந்தி மகிழ்ந்திடுவேன்.

தரையில் விழுந்தால் துடித்திடுவேன்.

நான் யார்?

மீன்



# விடுகதைகள்

1. மூடிய குடத்தினுள்ளே பவள முத்துக்கள்.
அது என்ன?

**மாதுளம்பழம்**

2. தாவிப் பாயும் பிள்ளைக்கு முதுகிலே
மூன்று கோடு. அது என்ன?

**அணில்**

3. நாலு கால் வீரன், நன்றிக்கு உதாரணம்.
அவன் யார்?

**நாய்**

4. ஓட்டு வீட்டுக்காரருக்கு வேகமாக நடக்க
வராது. அவன் யார்?

**ஆமை**

5. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன?

**கிளி**

## தகவல்கள்

மயிலுக்கு போர்வை கொடுத்தவர்

**பேகன்**

புறாவுக்காக தசையைக் கொடுத்தவர்

**சிபிச்சக்கரவர்த்தி**

பறவையை விடுவித்தவர்

**நபி பெருமானார்**

சிறு பிள்ளைகள் பாம்பை துன்புறுத்தியபோது தடுத்தவர்

**புத்த பெருமான்**

இலங்கையின் உயரமான மலை

**பேதுறுதலாகல மலை**

இலங்கையின் அழகிய நீர்வீழ்ச்சி
**துன்கிந்த**

இலங்கையின் மிக நீளமான ஆறு
**மகாவலி கங்கை**

வானொலியைக் கண்டுபிடித்தவர்
**மார்க்கோணி**

கணினியைக் கண்டுபிடித்தவர்
**சார்லஸ் பபேஜ்**


விமானத்தைக் கண்டுபிடித்தவர்
**ரைட் சகோதரர்கள்**

மின்குமிழைக் கண்டு பிடித்தவர்
**தோமஸ் அல்வா எடிசன்**

## சிங்கம்

ஓர் அடர்ந்த காட்டில் வயது முதிர்ந்த சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தச் சிங்கத்துக்கு நோய் ஏற்பட்டது. அதற்கு வைத்தியரிடம் செல்ல முடியவில்லை. உதவிக்கு யாரும் இல்லை. ஒரு நரி அதனருகே வந்தது. சிங்கம், நரியிடம் உதவி கேட்டது.

''சிங்கமே! நீயோ கொடிய மிருகம். உனக்கு உதவிசெய்ய என்னால் முடியாது'' என்று கூறிச் சென்றது.



அப்போது முயல் ஒன்று வந்தது. அதனிடம் உதவி கேட்டது.

முயலும் "நீயோ! கொடிய மிருகம். என்னை சாப்பிட்டு விடுவாய், இருப்பினும் உனக்கு நான் உதவிசெய்கிறேன். 'தீயோராயினும் உதவுவதே நல்ல பண்பு' எனக் கூறி சிங்கத்தை வைத்தியரிடம் அழைத்துச் சென்றது.



**சொல்லாக்கம்** (நரி, காடு, முயல், பிராணி, மிருகம்)

### ஈரெழுத்துச் சொற்கள்

காடு

காலை

நரி

ஆசை

நோய்

### மூவெழுத்துச் சொற்கள்

வயது

உதவி

கதவு

முயல்

பிராணி

பறவை

பண்பு

| ஒருமை | பன்மை |
|---|---|
| நரி | நரிகள் |
| முயல் | முயல்கள் |
| நான் | நாங்கள் |
| பிராணி | பிராணிகள் |

## ஆபத்தில் உதவுதல்

கமலனும் அவனது நண்பன் பாலனும் பக்கத்து வீட்டில் வசிக்கின்றனர். இருவரும் ஒரு நாள் விளையாட மைதானத்திற்குச் சென்றனர். அப்போது திடீர் என்று மழை பெய்தது.

நீண்ட நேரம் சென்றது. வீட்டுக்குச் செல்ல முடியாமல் தவித்தனர். அப்போது வாலிபன் ஒருவன் அவ்வழியால் வந்தான். அவர்களை அணுகி விபரத்தை அறிந்தான். கையடக்கத் தொலைபேசி மூலம் வீட்டாருடன் கதைத்தான். அவர்கள் குடை கொண்டுவந்து சிறுவர்களை அழைத்துச் சென்றனர்.

சொல்லாக்கம் (மழை, வீட்டில், நண்பன், சிறுவன், வாலிபன், மைதானம், நண்பன், நேரம், தொலைபேசி)

# காகமும் குருவியும்

ஓர் ஊரில் திருடன் ஒருவன் இருந்தான். திருடுவதே அவனது தொழில். ஒரு நாள் வீதியில் நடந்து வரும்போது ஒரு காகம் மரம் ஒன்றுக்குள் செல்வதும் திரும்பி வருவதுமாக இருப்பதை அவன் கண்டான் எதற்காக இந்தக் காகம் இவ்விதம் செய்கிறது என்பதைக் கண்டறிய ஆவல் கொண்டான். மரத்தில் ஏறிப்பார்த்தான். சிறகு ஒடிந்த ஒரு குருவி இருப்பதைக் கண்டான். அந்தக் காகம் சிறகு ஒடிந்த குருவிக்கு உணவு தேடிக் கொடுப்பதை அத்திருடன் அறிந்துக் கொண்டான். ''அந்த குருவிக்கும் இறைவன் உணவளிக்கின்றானே! நானும் திருட்டுத் தொழிலை விட்டு வாழ்ந்தால் இறைவன் எனக்கும் உணவளிப்பானே'' என்று எண்ணி திருட்டுத் தொழிலை விட்டு விட்டு திருந்தி வாழ எண்ணினான்.

சொல்லாக்கம் (வீதி, மரம், சிறகு, ஆவல், குருவி, தொழில், காகம், உணவு)

# பெரியவர்

ஓர் ஊரில் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் முகத்தில் தாடியுடன் கையில் தடியுடன் நடந்து வந்தார். அவ்வழியில் சென்று கொண்டிருந்த சிறுவர்கள் அப்பெரியவரைக் கண்டனர். பாட்டைப் பாடி அவரை வரவேற்றனர். பெரியவருக்கோ அளவு கடந்த மகிழ்ச்சி. அப்பெரியவரும் சிறுவர்களோடு சேர்ந்து ஆடிப்பாடினார். கையிலிருந்த பணத்தில் பானம் வாங்கிக் கொடுத்தார்.

| குறில் | நெடில் |
|---|---|
| குடி | கூடி |
| தடி | தாடி |
| படி | பாடி |
| பணம் | பானம் |

# பட்டம்



அப்பா தம்பிக்கு பட்டம் ஒன்றை வாங்கிக் கொடுத்தார். அப்பட்டத்தை விட்டுக் கொண்டிருந்தபோது வேகமாக காற்று வீசியது. பயத்துடன் வானத்தை பார்த்தவாறு நடந்து செல்லும்போது கல்லில் கால் தடுக்கியது. கையில் இருந்த பட்டத்தின் நூல் விடுப்பட்டது. பட்டம் மேலே பறந்து சென்று மரத்தில் சிக்கி விட்டது. அதனை நினைத்து அழுத வண்ணம் வீட்டை வந்தடைந்தான்.

**சொல்லாக்கம்** (தம்பி, நூல், பட்டம், மரம், காற்று, வீசியது, வானம், வீடு)

### ஈரெழுத்துச் சொற்கள்

நூல், வீடு
யார், கால்
நினை, கல்

### மூவெழுத்துச் சொற்கள்

தம்பி, காற்று, மரம், அப்பா, ஒன்று, வேகம்


அப்பிள்
பூனை
வாழைப்பழம்
நாய்

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |
| ஆய்த எழுத்து ஃ | | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |



දෙමළ කියවීම් පොත - 1 ශ්‍රේණිය

2016/T/01/011/139,000

E.P.D. (SALES DIVISION)
D01
1020005
TAMIL P.B. -GR 1
Rs. 45.00